செய்தி வெளியீடு எண்: 440 நாள்:14.07.2021

# <u>செய்தி வெளியீடு</u>

**<u>பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119–வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் உள்ள காமராஜர் சிலைக்கு,15.07.2021 அன்று காலை 10.00 மணியளவில் தமிழக அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.</u>**

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் பிறந்தநாள் ஆண்டுதோறும் அரசு விழாவாகக் கொண்டாடப்படுகிறது. பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119–வது பிறந்தநாளை முன்னிட்டு தமிழக அரசின் சார்பில், சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலையின் கீழ் அலங்கரித்து வைக்கப்படவுள்ள திருவுருவப் படத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (15.07.2021) அன்று காலை 10.00 மணியளவில் மலர் தூவி மரியாதை செலுத்தவுள்ளார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் சீர்மிகு பெருமக்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்கள்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் விருதுபட்டி என்ற விருதுநகரில் குமாரசாமி – சிவகாமி அம்மையாருக்கு மகனாக 15.07.1903ஆம் ஆண்டு பிறந்தார். காங்கிரஸ் இயக்க தலைவர்களில் ஒருவரான டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களின் அறிமுகத்தால் பல்வேறு சுதந்திரப் போராட்டங்களில் 1919 முதல் கலந்து கொண்டார். 1930ல் நடைபெற்ற உப்பு சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றார். 1936ல் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் செயலாளர் ஆனார்.

1937 –ல் விருதுநகர் சட்டமன்ற உறுப்பினரானார். 1941ல் விருதுநகர் நகர் மன்றத் தலைவர் ஆனார். 1946ல் விருதுநகர் சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர் ஆனார். 1952ல் விருதுநகர் நாடாளுமன்ற உறுப்பினரானார்.

1954ல் குடியாத்தம் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக வெற்றி பெற்று, தமிழ்நாட்டின் முதலமைச்சர் ஆனார். அதனை தொடர்ந்து 9 ஆண்டுகள் தமிழகத்தின் முதல்வராக பதவி வகித்தார். 1960–ல் 11ஆம் வகுப்பு வரை ஏழை பிள்ளைகளுக்கு இலவச கல்வி திட்டம் தந்தார்.

1964ல் மீண்டும் அகில இந்திய காங்கிரஸ் கட்சித்தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். 1969ல் நாகர்கோவில் நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், தமிழ்நாட்டில் முதலமைச்சராக இருந்த காலத்தில் பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவுத் திட்டத்தை அறிமுகப்படுத்தி கல்வி வளர்ச்சிக்கு வித்திட்டார். தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் அணைகள் கட்டி விவசாயத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தினார்.

அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாளான அக்டோபர் 2ம் தேதி 1975ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் காலமானார். தான் வாழ்ந்த 73 ஆண்டுகளில் 57 ஆண்டுகள் நாட்டுக்காக அரும்பாடுபட்டார்.

வாய்மை, தூய்மை, நேர்மை தொண்டாற்றல் போன்றவற்றிற்கு இலக்கணமாகத் திகழ்ந்ததால் '**கர்ம வீரர்**' என்றும் '**பெருந்தலைவர்**' என்றும் தென்னாட்டு காந்தி, படிக்காதமேதை, அரசரை உருவாக்குபவர் என்றும் காமராஜர் மக்களால் போற்றப்படுகிறார்.

காமராஜர் அவர்கள் மறைவுக்கு பின் ஒன்றிய அரசு அவருக்கு 1976ல் '**பாரத ரத்னா**' என்ற உயர்ந்த விருதை வழங்கி கௌரவித்தது. 1976 ஜூலை 15ஆம் நாள் பெருந்தலைவர் காமராஜர் நினைவு அஞ்சல் தலையை சென்னை காலைவாணர் அரங்கத்தில் ஒன்றிய அரசு வெளியிட்டது.

விருதுநகர் மாவட்டம் விருதுநகரில் காமராஜர் வாழ்ந்த இல்லம் தமிழக அரசால் அரசுடமையாக்கப்பட்டு நினைவு இல்லமாக மாற்றப்பட்டு 20.08.1975–ல் திறந்து வைக்கப்பட்டது.

சென்னை தியாகராய நகரில் காமராஜர் வாழ்ந்த இல்லம் 21.06.1978 முதல் நினைவு இல்லமாக மாற்றப்பட்டு திறந்து வைக்கப்பட்டது. மேலும், விருதுநகரில் பெருந்தலைவர் காமராஜர் நூற்றாண்டு மணிமண்டபம் 01.03.2006 அன்றும், கன்னியாகுமரியில் காமராஜர் மணிமண்டபம் 02.10.2000 அன்றும் திறந்து வைக்கப்பட்டது.

தமிழ்ச் சான்றோர்கள், விடுதலைப் போராட்ட தியாகிகள் மற்றும் தலைவர்கள் ஆகியோரை பெருமைப்படுத்தும் வகையில், அன்னார்களது பிறந்தநாளன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தி அரசு விழாவாக கொண்டாடப்பட்டு வருகிறது.

சென்னை, அண்ணா சாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு அவரது பிறந்தநாளான ஜூலை திங்கள் 15 ஆம் நாள் அன்று தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் மாலை அணிவித்து மலர்தூவி, மரியாதை செய்யப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு 15.07.2021 அன்று காலை 10.00 மணியளவில் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சீர்மிகு பெருமக்கள் கலந்துகொண்டு சிறப்பிக்கிறார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**